7233-03

விசேட அறிவித்தல்

வேலை அனுமதி முறைமை (EPS) இன் கீழ் நடத்தப்படும் கொரிய மொழித் தேர்வில் சித்தியடைந்து, கொரிய மனிதவள அபிவிருத்திச் சேவையின் (HRDK) இணையத்தளத்திலுள்ள வேலைவாய்ப்புத் தேடுநர் பட்டியலில் தொடர்ந்து பெயர்கள் இடம்பெற்றுள்ளவர்களுக்கான அறிவித்தல்

கொரிய மொழித் தேர்வில் சித்தியடைந்த பின்னர், தகைமையுடைய வேலைவாய்ப்புத் தேடுநர்களின் விபரங்கள் கொரிய மனிதவள அபிவிருத்திச் சேவையின் (Human Resources Development Service of Korea – HRDK) இணையத்தளத்தில் பதிவு செய்யப்படுகின்றன. குறித்த விபரங்களுக்கு HRDK இன் அனுமதி கிடைத்த பின்னர், வேலைவாய்ப்புத் தேடுநர் பட்டியலிலிருந்து (**Roster**) கொரிய தொழில் வழங்குநர்கள் தமது தொழிலாளர் தேவைகளுக்கு ஏற்ப பணியாளர்களைத் தெரிவு செய்கின்றனர்.

எனினும், சில வேலைவாய்ப்புத் தேடுநர்கள் கொரிய தொழில் வழங்குநர்களால் தெரிவு செய்யப்பட்டு வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்ட பின்னரும், பல்வேறு காரணங்களினால் கொரியக் குடியரசிற்குச் சென்று தொழிலில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்வதில்லை.

இதன் காரணமாக, கொரிய தொழில் வழங்குநர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன், தொழில் நிமித்தம் கொரியக் குடியரசிற்குப் பயணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஏனைய வேலைவாய்ப்புத் தேடுநர்களின் பயணங்களிலும் தாமதங்கள் ஏற்படக்கூடும். மேலும், இத்தகைய நிலைமைகள் ஏனைய வேலைவாய்ப்புத் தேடுநர்கள் வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் பாதிக்கக்கூடும். இவ்விடயம் தொடர்பான கவலைகளை கொரிய மனிதவள அபிவிருத்திச் சேவை (HRDK), இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு (Sri Lanka Bureau of Foreign Employment – SLBFE) உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எனவே, ஏதேனும் காரணத்தினால் HRDK இணையத்தளத்திலுள்ள வேலைவாய்ப்புத் தேடுநர் பட்டியலில் (**Roster**) தொடர்ந்து இடம்பெற விரும்பாதவர்கள், தங்களது கையொப்பத்துடன் கூடிய எழுத்துமூலக் கோரிக்கையை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கொரிய ஆட்சேர்ப்புப் பிரிவின் கணினிப் பிரிவிற்கு (Computer Unit) பின்வரும் மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மின்னஞ்சல்: koreanit2026@slbfe.lk

மேலும் HRDK இணையத்தளத்திலுள்ள வேலைவாய்ப்புத் தேடுநர் பட்டியலிலிருந்து (**Roster**) பெயர் நீக்கப்பட்டவர்கள், எக்காரணம் கொண்டும் அதே கொரிய மொழித் தேர்வுத் திட்டத்தின் கீழ் மீண்டும் குறித்த இணையத்தளத்தில் பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என HRDK அறிவித்துள்ளது.

இவ்விடயத்தில் தங்களது ஒத்துழைப்பும் ஆதரவும் வரவேற்கப்படுகிறது.

முகாமையாளர்
ஆட்சேர்ப்பு (கொரியா)
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்